12.12.2024

கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.

அமர்வு வழக்கு எண்.107/2018

அ.சா.13

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கலிவரதன் | | |
| த/பெ | ஏழுமலை | | |
| கிராமம் | கண்டம்பாக்கம் | தொழில் | |
| தாலுக்கா | விழுப்புரம் | வயது | 53/2024 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

முதல் விசாரணை

நான் தற்போது மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். இறந்துபோன முருகன் மனைவி வீரம்மாளை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். சீனுவாசன், ஜெயபால் ஆகியோர்களை எனக்கு தெரியும். இந்த வழக்கு தொடர்பாக எனக்கு எதுவும் தெரியாது. முருகன் இறந்துவிட்டார் என்று எனக்கு சம்பவம் அன்று காலை 7 மணிக்கு தான் தெரியும். காவல் துறையினர் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரிக்கவில்லை. நான் இந்த வழக்கு சம்மந்தமாக சமாதானம் பேச நான் செல்லவில்லை.

(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது.

அரசு தரப்பு குறுக்கு விசாரணை

போ லீசார் விசாரணையில் கடந்த 28/08/2014 ந் தேதியில் ஆறுமுகம்

கொலை வழக்கில் சாட்சியம் சொல்வதற்காக இந்த வழக்கில் இறந்துபோன முருகனுக்கு போலீசார் சம்மன் கொடுத்தார்கள் என்றும், இதை தெரிந்துகொண்ட எதிரிகள் சாட்சியம் சொன்னால் தண்டனை கிடைத்துவிடும் என்று பயந்து முருகனை 29/08/2014 ந் தேதி அதிகாலையில் முருகனை கொலை செய்த விசயம் தெரிந்து நான் சம்பவ இடத்திற்கு போனேன் என்றும் போலீசார் முருகனின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை நடத்தினார்கள் என்றும், அந்த விசாரணையில் அந்த கொலை நடப்பதற்கு முன்னால் வீரபத்திரனும், ராதாகிருஷ்ணனும் என்னிடம் வந்து முருகனிடம் சமாதானம் பேசும்படி கேட்டார்கள் என்றும், நான் கொலை வழக்கில் சட்டப்படி சமாதானம் பேசினால் தவறு என்று சொல்லி அனுப்பிவிட்டேன் என்றும், அந்த சமயத்தில் நான் கிராம பஞ்சாயத்து தலைவராக பணியிலிருந்தேன் என்றும் போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

**இல்லை.**

**மறுவிசாரணை**

**இல்லை**